Regional Bulletin / Puducherry / Tamil Script / 12.05-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 12.05.2024        நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாளை நடைபெறும் நான்காம் கட்ட மக்களவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்களவைக்கு 4 ஆம் கட்டமாக 9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளுக்கு நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மக்களவைக்கு இம்மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில் தனது அரசு ஏழைகளுக்கு அதிகாரமளிப்பதிலும், அவர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தி உள்ளதாக பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவைக்கு நான்காம் கட்டமாக 9 மாநிலங்களை சேர்ந்த 96 தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஆந்திராவில் மொத்தம் உள்ள 25 மக்களவை தொகுதிகளுடன் 175 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் சேர்த்து ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதேபோல் ஒடிசாவில் முதல் கட்டமாக 4 மக்களவை தொகுதிகளுடன் 28 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை தேர்தல் நடைபெற உள்ளது. 4 ஆம் கட்ட மக்களவை தேர்தல் ஆந்திர பிரதேசத்தில் 25 தொகுதிகளுக்கும், தெலங்கானாவில் 17 தொகுதிகளுக்கும், உத்திரபிரதேசத்தில் 13 தொகுதிகளுக்கும், மகராஷ்டிராவில் 11 தொகுதிகளுக்கும், மேற்கு வங்கம் மற்றும் மத்திய பிரதேசத்தில் தலா 8 தொகுதிகளுக்கும், பீகாரில் 5 தொகுதிகளுக்கும், ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4 மக்களவை தொகுதிகளுக்கும், ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதி என 96 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்துள்ளது. தேர்தலில் உத்திரபிரதேச முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாதி கட்சி தலைவருமான திரு அகிலேஷ் யாதவ், ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் திருமதி ஒய் எஸ் ஷர்மிளா, முன்னாள் கிரிக்கெட் வீரர் திரு யூசுப் பதான்,

4 ஆம் கட்ட தேர்தல் 2 (9)

மத்திய அமைச்சர்கள் திரு கிரிராஜ்சிங், திரு அர்ஜீன் முண்டா, பதவி பறிக்கப்பட்ட திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மஹீவா மொய்த்ரா உள்ளிட்ட முக்கிய வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 4 ஆம் கட்ட தேர்தலில் 170 பெண்கள் உட்பட ஆயிரத்து 717 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி, மாலை 6 மணிக்கு முடிவடையும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மக்களவைக்கு ஏற்கனவே 3 கட்ட தேர்தல்கள் முடிவடைந்த நிலையில், நாளை நான்காம் கட்ட மக்களவை தேர்தல் நடைபெறுகிறது. இதனை ஒட்டி, வாக்களிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

5 ஆம் கட்ட தேர்தல் (13)

இதற்கிடையே, மக்களவைக்கு இம்மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன. பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று மேற்கு வங்கம், பீகார் மாநிலங்களில் பிஜேபி

வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பங்கேற்றுள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி பாராபங்கியில் இந்திய கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பேரணியில் பங்கேற்று உரையாற்ற உள்ளார். காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் திரு அவினாஷ் பாண்டே, பைசாபாத் மற்றும் அம்பேத்கர் நகர் மாவட்டங்களில் கட்சி நிர்வாகிகள் கூட்டங்களை நடத்த உள்ளார். ரே-பரேலி தொகுதியில் காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்திக்கு ஆதரவாக காங்கிரஸ் மூத்த தலைவரும் சட்டீஸ்கர் மாநில முன்னாள் முதல்வருமான திரு பூபேஷ் பாகேர் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

மோடி பேட்டி 1 (16)

கடந்த 10 ஆண்டுகளில் தனது அரசு ஏழைகளுக்கு அதிகாரமளிப்பதிலும், அவர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தி உள்ளதாக பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஒரு ஆங்கில நாளிதழுக்கு இன்று அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரமளிப்பதும், அவர்கள் வெற்றி பெற தேவையானவற்றை வழங்குவதும் தான்

உண்மையான முன்னேற்றம் என்பதை இந்தியா உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து விடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார். உலகிலேயே இந்தியாவின் வேலையின்மை விகிதம் மிகக் குறைவு என்றும் அவர் தெரிவித்தார். முத்ரா வங்கி கடன்களின் பலன்களை, பயன்படுத்தி கோடிக்கணக்கான மக்கள் முதன் முறையாக தங்கள் தொழிலை தொடங்கி உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் அடுத்த 25 ஆண்டுகளுக்கு அடித்தளமாக செயல்படும் வலுவான பொருளாதாரத்தை இன்று தனது அரசு கட்டமைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மோடி பேட்டி 2 (12)

தனது அரசு ஏழைகளின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும், விரிவான சீர்திருத்தங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதன் மூலமும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் இரட்டை பணியை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒரு நாளிதழுக்கு அவர் அளித்த மற்றொரு பேட்டியில் அவர் இதை தெரிவித்துள்ளார். இந்த தேர்தல் தனிப் பெரும்பான்மை பெற்ற பிறகு விக்சித் பாரத் இலக்கை அடைய தனது அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்

என்றும் அவர் தெரிவித்துள்ளார். அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டத்தையும் புதிய அரசின் முதல் 100 நாட்களுக்கான செயல் திட்டங்களையும் பாஜக ஏற்கனவே தயார் செய்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். வரும் 2047 ஆம் ஆண்டிற்கு தனது அரசு இடைவிடாமல் உழைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*பிரதமர் மேற்கு வங்கம்* (16)

தமது அரசு மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்காது என்று பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று மேற்கு வங்க மாநிலம் பாரக்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசினார். காங்கிரஸ் கட்சி எஸ்சி. எஸ்டி மற்றும் ஓபிசிக்கான இட ஒதுக்கீட்டை பறித்து, மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க யோசித்து வருவதாக அவர் தெரிவித்தார். திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குறித்து பேசிய பிரதமர், ஒரு காலத்தில் பாரக்பூர் பகுதி சணல், பருத்தி, காகிதம் மற்றும் பொறியியல் வேலைகளின் மையமாக இருந்தது என்றும், இன்று பெரும்பாலான தொழில்துறை பகுதிகள் மூடப்பட்டு, தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் பரிதாபமான வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் அவர்

குறிப்பிட்டார். இதுகுறித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கவலைப்படவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார். சணல் விவசாயிகளுக்கு ஆதரவாக, சணல் பைகளில் சர்க்கரை மற்றும் தானியங்களை பேக்கேஜிங் செய்வதை பாஜக அரசு கட்டாயமாக்கி உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

*பிரதமர் பீகார்* (14)

பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி பீகார் மாநிலத்தில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். பீகாரில் உள்ள பல்வேறு நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளும் அவர், இன்று மாலை பட்டாச்சாரியா சந்திப்பில் ரோட் ஷோ நடத்த உள்ளார். பாட்னாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி நடத்தும் முதல் ரோட் ஷோ இதுவாகும். பாட்னா- சாகிப் நாடாளுமன்ற தொகுதியில் பாஜக வேட்பாளரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு ரவிசங்கர பிரசாத்துக்கு ஆதரவாக இந்த சாலை பவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பீகாரில் தனது 2 நாள் பயணத்தின் போது பிரதமர் இன்றிரவு பாட்னாவில் உள்ள ராஜ்பவனில் தங்க உள்ளார். நாளை காலை பாட்னாவில் உள்ள 10 ஆவது சீக்கிய குரு, குரு கோவிந்த் சிங் ஜி மகராஜின் பிறந்த இடமான தகத்

ஸ்ரீஹரி மந்திர் சாகிப்பில் அவர் பிராத்தனை செய்ய உள்ளார். அதன் பிறகு சரண், வைஷாலி, ஹாஜிபூர் உள்ளிட்ட 3 நாடாளுமன்ற தொகுதியில் நடைபெறும் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

*அமித் ஷா* (15)

3 ஆவது முறையாக மத்தியில் பிரதமராக திரு நரேந்திர மோடி பதவி ஏற்பது உறுதி என மத்திய அமைச்சரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். அவர் தெலங்கான மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசினார். பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், திரு நரேந்திர மோடி மீண்டும் பிரதமர் ஆவார் என கூறினார். திரு நரேந்திர மோடிக்கு பதிலான தம்மை பிரதமர் ஆக்க திட்டம் உள்ளதாக திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ள தகவலை அவர் திட்டவட்டமாக மறுத்தார். நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் திரு நரேந்திர மோடியையே விரும்புவதாக அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற தேர்தலில் பாஜக 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என்றும், திரு நரேந்திர மோடியே 3 ஆவது முறையாக பிரதமர் பதவியை ஏற்பது உறுதி என்றும் அவர் தெரிவித்தார். எதிர்

கட்சிகள் இது போன்ற தவறான தகவல்களை பரப்பி வருவதாக அவர் கூறினார். 75 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தீவிர அரசியலில் ஈடுபடக் கூடாது என பாஜக வின் கட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

*ராகுல்-பிரியங்கா* (9)

சமூக பொருளாதார கணக்கெடுப்பின் மூலமே மக்களின் வாழ்க்கை நிலையை அறிந்து திட்டங்களை செயல்படுத்தமுடியும் என்று காங்கிரஸ் பொதுசெயலாளர் திருமதி பிரியங்கா காந்தி கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருமதி ஷர்மிளாவை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ராகுல்காந்தி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், ஏழை குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு ஆண்டுக்கு தலா 1 லட்ச ரூபாய் வழங்கப்படும் என்றும், 100 நாள் வேலை திட்ட ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

*செவிலியர் தினம்* (13)

உலக செவிலியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. செவிலியர்களுக்கு முன்னுதாரனமாக விளங்கிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்நாள்

செவிலியர் தினமாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. நமது செவிலியர்-நமது எதிர்காலம்-நமது பொருளாதாரம் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும். உலக செவிலியர் தினத்தை ஒட்டி, புதுச்சேரி இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையில் செவிலியர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேல் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனை செவிலிய அதிகாரிகள், முதுநிலை செவிலியர்கள் செவிலியர்கள் பங்கேற்றனர்.

தேசிய தொழில்நுட்ப தினம் (12)

ராணுவ விவகாரங்களில் அறிவியல் தொழில்நுட்பங்கள் புரட்சியை ஏற்படுத்துவதாக முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அணில் சவுகான் தெரிவித்துள்ளார். தேசிய தொழில்நுட்ப தினம் நேற்று கொண்டாடப்பட்டதை ஒட்டி, அணு சக்தி துறை விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், தற்போதைய தொழில்நுட்பங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் முதலீடு ஆகியவற்றின் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார். சமூகத்திற்கான அணு

சக்தி, தண்ணீர், உணவு மற்றும் ஆரோக்கியத்தை பாதுகாத்தல் என்ற இரண்டு நாள் கருப்பொருள் நிகழ்ச்சியையும் அவர் தொடங்கி வைத்தார். நமது நாட்டின் முன்னேற்றத்தை வடிவமைத்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பிரதிபலிக்க வேண்டிய நேரம் இது என்றும் அவர் கூறினார்.

இஸ்ரோ (4)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் புதிய தொழில்நுட்பத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய திரவ ராக்கெட் இயந்திரத்தை வெற்றிகரமாக சோதித்துள்ளது. தமிழகத்தில் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்து விசை வளாகத்தில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வானிலை (11)

தமிழகம், புதுச்சேரி-காரைக்கால், கடலோர ஆந்திரா, ஏனாம், தெலங்கானா, ஒடிசா மற்றும் கர்நாடகா ஆகிய இடங்களில் அடுத்த 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய

பிரதேசம், மகராஷ்டிரா, ஜார்கண்ட், மேற்கு வங்காளம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு இடி-மின்னல், பலத்த காற்று வீசக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இதே போல், இமாச்சல பிரதேசம் மற்றும் உத்திரகண்ட் ஆகிய இடங்களிலும் அடுத்த 2 நாட்களில் இடி-மின்னலுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாளை நடைபெறும் நான்காம் கட்ட மக்களவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்களவைக்கு 4 ஆம் கட்டமாக 9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளுக்கு நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மக்களவைக்கு இம்மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில் தனது அரசு ஏழைகளுக்கு அதிகாரமளிப்பதிலும், அவர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவதிலும்

கவனம் செலுத்தி உள்ளதாக பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.